KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

# இஸ்லாமியமயமாக்கமும் திருமண நடைமுறைகளும் : சம்மாந்துறைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் விசேட ஆய்வு

**M. Nusrath banu**
Department of sociology
South Eastern University of Sri Lanka
Oluvil

**ஆய்வுச்சுருக்கம்**

முஸ்லிம் மக்களை அதிகமாகக் கொண்டுள்ள சம்மாந்துறைப் பிரதேசத்தில் திருமண நடைமுறைகள் மிகவும் வித்தியாசமான தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய திருமண நடைமுறைகள் மிகவும் ஆடம்பரமாகவும்,விண்விரயங்களுடனும் நிகழ்த்தப்படுவதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன்,இது ஓர் சமூகப்பிரச்சினையினையும் தோற்றுவிக்கின்றது.மேற்குறித்த திருமண நடைமுறைகளினை இஸ்லாமிய மயப்படுத்துவதன் மூலமாக இதனை ஓர் எளிமையான கலாசார நிகழ்வாக மாற்றி மக்களை வீண் அசௌகரியங்களான கடன் சுமை,வட்டிக்கு பணம் எடுத்தல்,காணிகளை ஒத்தி வைத்தல் முதலியவற்றில் இருந்து பாதுகாக்க முடியும். சம்மாந்துறைப் பிரதேசத்தில் திருமணம் தொடர்பாக பின்பற்றப்படும் கலாச்சார நிகழ்வுகளைக் கண்டறிந்து அதனை எவ்வாறு இஸ்லாமியத்துவப்படுத்தலாம் என்பதனைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகமாகும். நோக்க மாதிரி எடுப்பு மூலம் 42 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு நேர்காணல் இலக்குக் குழுக்கலந்துரையாடல், அவதானிப்பு முறை மூலம் முதலாம் நிலைத் தரவுகளும் புத்தகங்கள்,சஞ்சிகைகள்,கட்டுரைகள்,பிரதேச செயலகத் தரவுகள்,இணையத்தள புத்திஜீவித்துவ கட்டுரைகள் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இறுதியாக ஆய்வின் முடிவில் கண்டுபிடிக்கப்பட்ட விடயம் என்னவெனில் திருமணத்திற்காக இப்பிரதேச மக்கள் மிகவும் பிரயத்தனம் எடுத்து வீணாகவும்,ஆடம்பரமாகவும் செலவு செய்யும் மோகம் கொண்டுள்ளனர். இவை அனைத்தும் மக்களை கடன் சுமைக்கு ஆளாக்குகின்றன. எனவே, இதனை இஸ்லாமியத்துவப்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கையினை, அவர்களின் கலாசார நிகழ்வுகளை வினைத்திறனாகவும், திருப்தியுடனும், இறை திருப்தியுடனும் நிறை வேற்றிக் கொள்ள வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** கலாசாரம், பண்பாடு, இஸ்லாமியத்துவம், பாரம்பரியம், நவீனத்துவம்

## அறிமுகம்

மிகவும் கண்ணியமும் மகத்துவமும் மிக்க இறைவன் இப்பேரண்டத்தைப் படைத்து அதில் மனிதன் சிறப்பாக வாழ்வதற்கான அனைத்து விதமான வழிகாட்டல்களையும் குர்ஆன் சுன்னாவினூடாக இவ்வுலகிற்கு கொடுத்துள்ளான்.எல்லா விதமான துறைகள் பற்றிய ஆழ்ந்த விளக்கத்தையும் கொடுத்துள்ளான்.குறித்த காலப்பகுதியில் அறிவினை பகுத்தறிவு மற்றும் இறை அறிவு எனப் பிரித்து நோக்க ஆரம்பித்தனர்.இதன் விளைவு வேத அறிவினைப் பெற்றோர் உலகத்தின் சில விடயங்களை விட்டும்,உலக அறிவை பெற்றோர் வஹியை விட்டும் தூரமாகும் செயற்பாடு இடம் பெற்றது.வேதம் அருளப்பட்டதன் நோக்கு அங்கு நிறைவேற்றப்படாமல் விடப்பட்டது.ஆகவே இப்பிரச்சினையிலிருந்து முஸ்லிம் உம்மத்தை ஆழ்ந்த உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பி இஸ்லாமிய வாழ்வினை புதுப்பொழிவுடன் நடாத்திச் செல்ல பகுத்தறிவையும், இறைத்தூதையும் இணைத்து ஒரு மாபெரும் அறிவுப்

பாரம்பரியத்தை உருவாக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. நவீன மேற்கத்தேய அறிவு, மதச்சார்பின்மை, சடவாதம், தாரண்மைவாதம் என்பவற்றின் ஊடாக இஸ்லாத்தின் கொள்கைகளை ஆட்டம் காண செய்தது. இத்தகைய மேற்கத்தேய செல்வாக்கிலிருந்து இஸ்லாமிய அடிப்படைகளை, கொள்கைகளை, சட்டங்களை தெளிவுபடுத்தும் செயற்பாட்டினையே இஸ்லாமியத்துவம் எனும் சொற்றொடர் தெளிவுபடுத்துகிறது. சமகால அறிவினை இஸ்லாமியத்துவப்படுத்தல் எனும் கருத்தினால் பெரும்பாலான அறிஞர்களால் கூறப்பட்டாலும் **நகீப் அத்தாஸ்** என்பவர் முஸ்லிமின் சிந்தனைக்குள் புகுந்திருக்கும் மேற்கத்தேய செல்வாக்கினை விடுத்து இஸ்லாமிய அடிப்படைகளை புகுத்துவதனையே இது குறிக்கும் என்று கூறுகின்றார்.(அறபாத் கரீம், 2014)

அடுத்து எமது தலைப்பின் இரண்டாவது பகுதியை நோக்கினால் ஒரு சமூகம் தன்னகத்தே கொண்டுள்ள நடைமுறை, பழக்கவழக்கங்கள் என சுருக்கமாகவும், குறித்த சமூகத்தில் அன்றாட வாழ்கை, உறவுமுறை, விவாகம், பிள்ளை வளர்ப்பு, மரணம், உணவு, ஆடை, சடங்குகள் என்பவற்றின் ஊடாக தோன்றுகின்ற ஒரு மனநிலை எனவும் கலாச்சாரத்தை வரையறுக்கலாம். நவீன காலப் பிரச்சினைகளையும், சிக்கல்களையும் குறிப்பிடுகையில் **தாஹா ஜாபிர் அலவானி** அவர்கள் குடும்ப சீர்கேடுகள் பற்றி கூறுகின்றார். இவ்வாறான சீர்கேடுகளுக்கு மனிதனின் வாழ்லில் பெரும்பாலும் கலாச்சாரம் தாக்கம் செலுத்துவதனை நோக்கலாம். எனவே இவ்வாறான கலாச்சார அறிவினை குர்ஆனிய சிந்தனையிலிருந்து அணுகி பொருத்தமான திட்டங்களையும், அணுகுமுறைகளையும் சமூகத்திற்கு முன்வைக்க வேண்டிய தேவை உண்டு. எனவே அறிவு எனும் பெரிய தலைப்பின் கீழ் காணப்படும் கலாச்சார அறிவினை எவ்வாறு இஸ்லாமியத்துவப்படுத்த முடியும் என்பதே இவ் ஆய்வாக அமையும்.

## ஆய்வுப் பிரச்சினை

மனிதர்களால் பின்பற்றப்படும் கலாச்சாரங்கள் முழுவதும் இஸ்லாமிய வழிகாட்டல்களுடன் நடைபெறுகின்றதா? என்பது பற்றிய ஆய்வு தேவை. அவ்வாறெனின் எவ்வாறான மாற்றங்களைக் கொண்டு இவை இஸ்லாமியப்படுத்தப்படல் வேண்டும் என்ற ஆய்வு தேவை.ஆகவே அறிவை இஸ்லாமியத்துவப்படுத்துவதின் நோக்கத்தையும் குறிப்பாக கலாச்சார அறிவினை இஸ்லாமியத்துவப்படுத்தாததினால் ஏற்படும் பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு நோக்கம்

சம்மாந்துறைப் பிரதேசத்தில் திருமணம் தொடர்பாக பின்பற்றப்படும் கலாச்சார நிகழ்வுகளைக் கண்டறிந்து அதனை எவ்வாறு இஸ்லாமியத்துவப்படுத்தலாம் என்பதனைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகமாகும்.

## ஆய்வு முறைமை

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு பண்பு ரீதியான ஆய்வு முறை (Qualitative research meathod) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது ஒரு சமூக விஞ்ஞான ஆய்வு என்ற அடிப்படையில் கள ஆய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வு முதலாம் நிலைத் தரவுகளை பிலதான மூலகமாகவும் ஏனைய தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு நோக்க மாதிரி எடுப்பு உபயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்கானல், இலக்குக்குழு கலந்துரையாடல், அவதானம் என்பன மூலம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேசத்தின் 480 குடும்பங்களில் 10% இனை நேர்கானலுக்காக தெரிவு செய்ததில் கட்டமைக்கப்படாத வினாகத் தொகுதியினை உள்ளடங்கிய 48 நேர்காணலில் பின்வருவோர் இடம் பெற்றனர்.

இரண்டாம் நிலை தரவுகளாக பிரதேச செயளாளர் அறிக்கை, பண்பாட்டுத்

தொடர்பான சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள், இலத்திரினியல் வெளியீடுகள், இலக்கியக் கட்டுரைகள், புலமையாளர்களின் ஆக்கங்கள்(scolar Artical) மூலம் சேகரிக்கப்பட்டு ms -word மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பிரதேசம்

மட்டக்களப்புத் தரவை என ஆரம்பத்திலும் 1700இற்குப் பிறகு சம்மாந்துறை எனவும் பிரபல்யமடைந்த, முழு இலங்கைத் தீவிலும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பழம் பெரும் பிரதேசம் எமது ஊர் சம்மாந்துறையாகும். மட்டக்களப்புத் தரவை எனும் பெயர் வரக் காரணம் ஜெய்லானியிலிருந்து கடல் மார்க்கமாகக் கப்பலொன்று வந்தடைந்தபோது அவர்களுக்கு மட்டக்களப்புத் தரவை காசிம் என்பவர் குடிக்கக் கொடுத்ததால் இப்பெயர் வந்ததாக ''சாஹுல் ஹமீது ஒலியுல்லாஹ் கல்முனை வந்த கதை'' என்ற பாடல் எடுத்தியம்புகின்றது. இன்னும் தென்னிந்திய வர்த்தகர்கள் தங்களுடைய ''சம்பன்'' என்ற வள்ளங்களை இங்கு வந்து நங்கூரமிட்டதன் காரணமாகக் காலப் போக்கில் சம்மாந்துறை எனப் பெயர் பெற்றதாயும், வயல் நிலங்கள் சூழப்பெற்ற ஓரிடம் என்பதால், இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சம்பா நெல் ஏற்றுமதி செய்யப்பட்ட காரணத்தினால் சம்பாதுறை என அழைக்கப்பட்ட எமது ஊர் ''சம்மாந்துறை'' என காலப்போக்கில் அழைக்கப்பட்டது. இன்னும் பொலன்னறுவை மன்னன் இரண்டாம் விக்ரமபாகு ஆட்சிக் காலத்தில் இங்கு வந்த முகையதீன் ஆண்டவர் தனது வாய் பேச முடியாத மகன் இரண்டாம் விஜயபாகுவிற்கு இவ்வூரில் உள்ளோர் வைத்தியம் செய்தமையால் அவரின் பெயரில் ''முகையதீன் பள்ளி'' என்ற சம்மாந்துறையில் முதல் பள்ளி வாயலை நிறுவியதாகவும் வரலாறு கூறுகின்றது. ஆக, பரப்பிலும், அடிப்படைப் பொருளாதார வளத்திலும் கல்வியிலும் விவசாய அபிவிருத்தியிலும் போக்குவரத்திலும் மேம்பட்ட ஒரு சிறப்பான பிரதேசமாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. இன்னும் சம்மாந்துறையில் வருமானம் ஈட்டக்கூடிய முக்கிய தொழிலாக ஆரம்ப காலத்தில் விவசாயம் காணப்பட்டது. கல்வி நடவடிக்கைகளை நோக்குகையில் ஆரம்பத்தில் 5 பாடசாலைகள் பிரசித்தி பெற்றுக் காணப்பட்ட போதிலும் தற்போது 64 பாடசாலைகள் காணப்படுவதுடன் அவற்றின் விளைவுகளாகத் திறமை மிக்க மாணவர்கள் உருவாகி ஊரில் பல சேவைகளையும் செய்கின்றனர். மேலும், மார்க்க விடயங்களைத் தொடர்ந்தும் சிறப்பாக மேற்கொள்ள 7 ஜும்ஆப் பள்ளிவாயல்கள் உட்படப் பல பள்ளிவாயல்கள் காணப்படுகின்றமை விஷேடமாகும். இன்னும் ஆரம்ப காலங்களில் ஆண்களும், பெண்களும் தமக்கேயுரிய சில விளையாட்டுக்களைப் பொழுதுபோக்கிற்காகக் கோஷ்டியாகச் சேர்த்து விளையாடுவர்.

தொடர்ந்தும் சம்மாந்துறையைப் பொறுத்தவரை கணக்கன் கத்தர் குடி, மாமனார் போடி குடி, தேன் முதலி குடி, வெள்ளரசன் குடி, சங்கிதி குடி, இராசம்புள்ள குடி, சுல்தான் குடி போன்ற 25 குடிகள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. இவை ஒரு குடும்பத்தின் தலைமை தாங்கும் அமைப்பாக இருந்து வந்துள்ளதுடன், குடும்பப் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து இவர்களே தலைமை தாங்கி தீர்த்து வைப்பர்.[1]

கலாசாரச் சிறப்புக்களின் அடிப்படையில் திருமணத்தை எடுத்து நோக்கினால் பெட்டி கொண்டு போதல், திட்டம் கட்டுதல், கேள்வி வட்டா, மருதோண்டி இடல், பந்த கால் நாட்டுதல், நாள் வட்டா போன்ற சம்பிரதாயங்களுடன் பல நாட்கள், மாதங்கள் இடம்பெறும். இன்னும் காரியங்கள் நிறைவேற, சுகவீனம் போன்ற காரியங்களுக்கு நேர்த்திக்கடன் வைப்பது, கபூர்ஸ்தானங்களுக்கு நேர்ந்து அனுப்புவது போன்ற மூடப்பழக்கவழக்கங்களைக் கொண்டும் இருந்தனர். ஆனால், தற்போது அவை குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் அக்காலத்திலிருந்தே பெருநாட்களைச் சிறப்பாக அனைவரும் சேர்ந்து கொண்டாடி இருப்பதுடன், பல வேலைகளைச் செய்யும்போது களைப்பு

நீங்க தமக்கேயான நாட்டார் பாடல்களையம் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல்வேறு சுவாரஸ்யமான விடயங்களைத் தன்னகத்தே கொண்டு, இயற்கையை அழகிற்காகச் சூழக் கொண்ட பாரிய பிரதேசமே சம்மாந்துறைப் பிரதேசமாகும்.(musthafa,2014).

## பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

பெற்றுக்கொள்ளப்பட்ட தரவகளின் அடிப்படையில் திருமணம் எனும் சமய நிகழ்வில் பின்வரும் விடயம் தொடர்ச்சியாக கலாச்சாரமாக பின்பற்றப்படுவதாலும் அவற்றை எவ்வாறு இஸ்லாமியமயப்படுத்துவதன் மூலம் வஹியின் நிழலில் வாழ்வினை அமைத்துக்கொள்ள முடியும் என்பது பற்றியும் ஆராய்வோம்.அந்த வகையில் ஆய்வுப் பிரதேசமானது சூழ தமிழர்களையும், கிறிஸ்தவர்களையும் கொண்டு காணப்படுவதால் முஸ்லிம்களால் நடாத்தப்படும் பெரும்பான்மையான நிகழ்வுகளில் அவற்றின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றமை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.அந்த வகையில் திருமணத்தின் ஆரம்பத்திலிருந்து திருமணம் நடைபெற்று முடியும் வரையான செயற்பாடுகளில் எவ்வாறான கலாச்சார தாக்கங்கள் காணப்படுகின்றன எனவும் அவற்றிற்கான இஸ்லாமிய வழிகாட்டல்கள் மற்றும் மாற்றீடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றி காண்போம்.அந்த வகையில குறித்த ஆறு விடங்களில் கலாச்சார தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளது,அதனை இஸ்லாத்தின் வழிகாட்டலில் எவ்வாறு நோக்கலாம் என்பது பற்றி காண்போம்.

## மாப்பிள்ளை தேடுதலும் பெண் பார்க்க செல்லலும்

ஒரு பெண்ணுக்கு மாப்பிள்ளை பேச வேண்டுமானால் முதலாவதாக ஒரு நல்ல நாள் பார்த்து மிக ரெுங்கிய உறவினர், காக்கா(சகோதரன்), மாமா, மச்சான், பெரியப்பா, சின்னப்பா, குடி மரைக்கார், பள்ளிவாசல் கத்தீப், பெரிய ஆலிம் மற்றும் இரண்டொரு பிரமுகர் சேர்ந்த அணி ஒன்று பெண் வீட்டில் ஒன்று கூடும்.

தம் மகளுக்கு ஒரு மாப்பிள்ளை பேச வேண்டியிருப்பதால் தாம் பெயர் குறிக்கும் மாப்பிள்ளையைக் கேட்டுப் பார்க்குமாறு பெண்ணின் பெற்றோர் அச்சபையிடம் விண்ணப்பிப்பர்.

இதைச்செவியுற்ற இவ்வணியினர் கலந்துரையாடலில் ஈடுபடுவர். இறுதியில் மாப்பிள்ளை கேட்டுப் போக நல்ல நாள் பார்க்கப்பட்டு குறிப்பிட்ட அந்த நாளில் எல்லோரும் மாப்பிள்ளை வீட்டுக்குப் போவதென முடிவு எடுக்கப்படும். இது பற்றிக் குடிமரைக்காயர் மாப்பிள்ளையின் பெற்றோரிடம் தூது செல்வார்.

பெண்ணுக்குரிய மாப்பிள்ளையைத் திட்டப்படுத்தியதும் இரு திறத்தவரும் உரித்துடன் சொந்தங் கொண்டாடி உறவு கலப்பர். ஒருவருக்கொருவர் நெருங்கி வர விளைவர். சம்பிரதாயப்படி ஒரு நாளைக்கு பெண்வீட்டில் சொந்தக் காரிகள் ஒன்று கூடுவர். பலகார வகை, பழவகை, மற்றும் தீவனங்களை எடுத்துக் கொண்டு இரவு வேளையில் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்வர். இவர்களை மாப்பிள்ளை வீட்டார் வரவேற்று உபசரிப்பர். சிற்றுண்டி வழங்கப்பட்டுத் தாம்பூலமும் கொடுக்கப்படும். இது முன்னுறவு கொண்டாடப்படும் நிகழ்வாதலால் இரு அணியினரும் கலகலப்பாக சிரித்துப்பேசி மகிழ்வர். ஈற்றில் பெண்திறத்தார் விடைபெற்றுத் திரும்புவர்.இந் நிகழ்வின் போது பல்வேறு உணவுப் பண்டங்கள் பரிமாறப்படும். பெண்வீட்டிலிருந்து சாமான்களை கொண்டு சென்ற வெற்று ஓலைக் பெட்டிகளைத் திருப்பியனுப்பும் போது மாப்பிள்ளையால் வாங்கப்பட்ட சேலை, சட்டை, முகம் பார்க்கும் கண்ணாடி, சீப்பு, சவர்க்காரம், கூந்தல் தைலம், தலைப்பின் வகை, அத்தர் கீசா, முதலியவற்றுடன் பலகார வகை, நெய்ப் போத்தல், தேன் சாடி முதலிய சாமான்கள் அப்பெட்டிக்குள் வைக்கப்படும்.

அவற்றைச் சுமந்து கொண்டு மணமகனின் சகோதரிகள், உறவு முறை மகளிர் முதலியோர் பெண்வீடு செல்வர். இவர்கள் பெண் வீட்டில் நன்கு கவனிக்கப்பட்டு இரு பகுதியினரும் உரையாடி, உறவாடி மகிழ்வர் சிலர் இவ்வாடைகளைப் பெண்ணுக்கு உடுத்தாட்டி அழகு பார்த்து மகிழும் ஒரு சம்பிரதாயமும் இருந்துள்ளது.

இப்படியான உபசரிப்புகளால், ஒத்தாசைகளால் நெருக்கமான உறவு கொள்வதால் இரு வீட்டாரும் பின்னிப்பிணைந்த உளப்பாங்கை கொண்டிருப்பர்.

மேலே நாம் கண்ட விடயங்கள் தற்போது வழக்கத்தில் உள்ள ஒன்றாக காணப்படுகின்றமை நாம் அறிந்ததே. இதில் இஸ்லாம் கூறும் வழிகாட்டல்களைக் காண்பது முக்கியமான ஒன்றாகும். அதாவது சமூகத்தில் மிகவும் அந்தஸ்து உடையோரை திருமணம் கேட்டுப்போதல் சமூகப் பழக்கங்களில் ஒன்றாக காணப்பட்டாலும் இஸ்லாம் ஒரு பெண்ணை திருமணம் செய்வதாயின் அதற்கான நிபந்தனைகள் நான்கு என பிரஸ்தாபிக்கிறது.அந்த வகையில் பணத்தை நோக்கமாக வைத்து திருமணம் முடிப்பது யஹூதிகளின் பழக்கமாகவும்,பெண்களின் அழகை பார்த்து மணமுடிப்பது நஸாரக்களின் பழக்கமாகவும், குடும்ப அந்தஸ்த்தை பார்த்து மணமுடிப்பது குறைஷியர்களின் வழக்கமாகவுமுள்ளது.(Ihsan,2015).மாற்றாக இஸ்லாம் தன்னகத்தே அதைவிட சிறப்பான முறையில் பெண்ணைத் தெரிவு செய்யும் படியும்,அதிகமான குழந்தைகளை பெற்றெடுக்கும் பெண்களை திருமணம் செய்யும் படியும்,அன்பு பராட்டும் பெண்களைத் திருமணம் செய்யும் படியும் வழிகாட்டுகின்றன.(புகாரி, 5090 /புகாரி, 5080 /புகாரி, 5079/ இப்னு மாஜா: 1861).இன்னும் நீங்கள் விரும்பக்கூடிய மார்க்கப்பற்றும் ,நற்குணமும் உடையவர் உங்களிடத்தில் பெண் கேட்டு வந்தால் அவருக்கு நீங்கள் திருமணம் முடித்துக் கொடுங்கள்.அவ்வாறு நீங்கள் செய்யவில்லை என்றால் பூமியில் குழப்பமும்,பெரும் சர்ச்சையும் ஏற்படும் என்பதாக மணமகளின் பெற்றோருக்கு அழகிய வழிகாட்டலை வழங்கியுள்ளது.(ஹாகிம்/ திர்மிதி :1085 / இப்னு மாஜா: 1967).இன்னும் மணமகனின் பொருத்தத்தன்மை எவ்வாறு அமைய வேண்டும்,அதனை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும் என்பது பற்றியும் கூறுகிறது.

இன்னும் கன்னிப் பெண்ணாயினும்,ஏலவே திருமணமான பெண்ணாயிருப்பினும் குறித்த பெண்ணின் அனுமதி கட்டாயம் தேவை எனவும் மாறாக அவ்வாறு பெறப்படாதவிடத்து பெண் திருமணத்தை நிறுத்த முடியும் எனவும் கூறுகின்றது. அடுத்த கட்டமாக பெண் பார்க்கச் செல்வது என்பது ஒரு சடங்காக மாத்திரமின்றி நபிவழியாகவும் உள்ளது.ஒரு முறை முகீரா இப்னு ஷ.்.பா என்ற நபித்தோழர் தான் திருமணம் செய்யப் போவதாக கூறிய போது அவளைச் சென்று பார்ப்பீராக.ஏனெனில் அவ்வாறு பார்ப்பது உங்கள் இருவருக்கும் மத்தியில் நேசம் நிலைப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதாக நபியவர்கள் கூறியுள்ளார்கள்( திர்மிதி :1087 / இப்னு மாஜா: 1865).ஆக இவ்வாறான வழிகாட்டலில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளும் அவதானம் என்னவெனில் திருமணம் பேசுதல்,மாப்பிள்ளை கேட்டுச் செல்லல்,பெண் பார்த்தல்,பெட்டி கொண்டு செல்லல்,திட்டக் கட்டச் செல்லல் என்ற சம்பிரதாயங்களை நபிவழியில் வீண்விரயமின்றி செய்வதன் ஊடாக இவற்றை ஏனைய கலாச்சார தாக்கமற்ற செயற்பாடாக மாற்ற முடியும்.

## சீதனமும் மஹரும்

“சீதனம்” கைக்கூலி எனப்படும். பிரதானமாக சீதனம், தீவனங்கள், கூறை, தாலி மாற்றல், வயல் விதைத்துக்கொடுத்தல், வீடு, வளவு உறுதி எழுதுதல் சம்மந்தப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்படும். சிலவேளைகளில் பெண்வீட்டாரின் பொருளாதார நிலையை மீறி வலுக்கட்டாயமாக சீதனம் கேட்பதும் உண்டு. இதனால் விரும்டத்தகாத விளைவுகள் ஏற்பட்டு மங்களமான இந்நிகழ்வுகளில் மனமுறிவும் ஏற்படுவதுண்டு.

சில மணமகளின் பெற்றோர் எம்மால் இவ்வளவுதான் தரமுடியும். விரும்பினால் செய்யுங்கள் முடியாவிட்டால் விட்டுவிடுங்கள் என்று நறுக்காய் சொல்லிவிடுவார்கள். இன்னும் சிலர் தமது தகுதியை மீறிய சீதனத்துக்குச் சபையில் சம்மதித்துப் பின் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது பெரும் பிரச்சினைக்குள்ளாவதும் உண்டு. வசதிபடைத்த சமய சீலர்களான சில மாப்பிள்ளைகள் பெண்ணுக்குரிய நகைகள், உடைகள் மற்றும் அணிகலங்கள் பொருள்களை கலியாணத்திற்கு முன்பே ஒழுங்கு செய்து பெண்வீட்டுக்கு அனுப்பி

வைத்த ஓர் உயரிய முன்மாதிரியும் அப்போது கடைப்படிக்கப்பட்டு வந்துள்ளது. இவர்களே உண்மையான இஸ்லாமிய மணவாழ்வின் வெளிச்சங் காட்டிகளாவர் எம் நெஞ்சம் நவிலும் வாழ்த்துக்கள் இவர்களுக்கு.சீதனங்களாக பணம் வயற்காணி, அவணக்கணக்கில் நெல், மாடுகள், வீடு, வளவுகள், வீட்டுபயோகச்சாமான்கள், வண்டி, வண்டிக்குரியமாடு, சேனை முதலியன கொடுக்கப்பட்டன.விதை நெல், மற்றும் செலவுகளைச் செய்து முதன்முறையாக வயலை விதைத்துப் புது மாப்பிள்ளைக்குப் பெண்ணின் தகப்பனார் கொடுக்கும் ஒரு சம்பிரதாயமும் முன்னோரின் வழக்காறாகக் காணப்படுகின்றது.

அக்கால மரபுப்படி திட்டக்கட்டல் விவகாரக் கருத்துப்பரிமாற்றம் முடிந்ததும் பலகாரவகை, பழவகைகள் சபைக்கு வழங்கப்பட்டு அத்தர்பூசி, பன்னீர் தெளிக்கப்பட்டும் பாத்திஹாவும் ஓதப்படும் வாசனையூட்டப்பட்ட தாம்பூலவட்டா சபை நடுவில் தயாராய் இருக்கும். தாம்பூலம் என்றதும் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறிப்பிரிவர்.சீதனம், சீர்வரிசைகள் மற்றும் கலியாணச்சடங்குகளைப் பற்றிய பல கிராமியப்பாடல்கள் அக்காலத்தில் பாடப்பட்டுள்ளன.

இருந்தும் சீதனம் என்பது எவ்வாறான விளைவுகளை இன்றைய சமூகத்தில் விட்டுச் செல்கின்றன என்பது பற்றி நாம் அறியாத விடயமல்ல.எனவே அதனை இல்லாமல் செய்ய வேண்டிய தேவை உள்ளது.அதற்கு முன்னர் திருமணதத்தின் நோக்கம் பற்றிக் ஹதீஸில் ஒரு சக்தி பெற்ற ஆண் திருமணம் செய்ய தகுதியானவனாக காணப்படுவான(Buhari,5066/Muslim,3400). எவ்வாறான சக்தி எனில் தன்னுடைய மனைவிக்கு ஆடை,உணவு,உறையுள் என்பவற்றை வழங்க முடியுமான ஒருவனே திருமணம் செய்ய முடியும்.மாறாக குறித்த பெண்ணிடம் வீடு,நகை என்பவற்றைப் பெற்று திருமணம் முடிக்கும் ஆண் தகுதியில்லாமல் திருமணம் செய்பவனே.எனவே குறித்த ஆணின் திருமண ஒப்பந்தம் எந்தளவு சரியானது என்பது பற்றிய தெளிவு அவசியம். இது இப்படி இருக்க ஒரு முறை ரஸுலுல்லாஹ் ‘‘திருமணம் செய்ய விருப்பமான ஆணிடம் திருமணம் முடிக்க என்ன இருக்கிறது’’ என வினவ, வீட்டுக்குச் சென்று பார்த்ததில் எதுவும் இல்லாத நிலையில் ‘‘இரும்பாலான ஒரு மோதிரத்தையாவயது கொடுப்பீராக’’ என கூறுகிறார்(Buhari@ Muslim).எனவே இவ்விடத்தில் இவ்வினா ஒரு ஆணிடம் வினவப்பட்டதே அல்லாமல் ஒரு பெண்ணிடம் வினவப்படவுமில்லை,பெண் வீட்டாரிடம் வினவப்படவுமில்லை.இவ்விடத்தில் சீதனத்தை இஸ்லாமியத்துவப்படுத்தல் என்பதை விட மஹராக மாற்றீடு செய்வதே மிகப் பொருத்தம்.

## திருமணமும் சம்பிரதாயமும்

கிராம மக்களின் நேசமும், நெருக்கமும், உதவியொத்தாசைகளும் மிக உயர்வானவை. கிராமங்களில் வாழையடி வாழையாக நிகழ்ந்து வரும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் எல்லோரும் வியூகம் அமைத்துப் பார்வையாளர்களாய் மாத்திரமல்லாமல் பங்காளர்களாய் முன்னின்று உழைப்பர்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு வீட்டில் திருமணமொன்று நடைபெற ஆயத்தங்கள் செய்யும் போது அத்திருமணம் தமது வீட்டில் நடைபெறப் போவதாக கருதி ஒவ்வொருவரும் பகலிரவு பாராது விரும்பி உழைப்பர். கலியாண விருந்திற்கும் ஏனைய தேவைகளுக்கும் அவணக்கணக்கில் நெல் குற்றும் வேலை ஆரம்பமாகும். அவரவர் வீட்டிலிருந்து உரல், உலக்கை, பெட்டி, தட்டு, சுளகு முதலியன கொண்டுவரப்படும். பெண்கள் வட்டமாய் உரல்களை வைத்து நெற்குற்றத் தொடங்குவர். எல்லோரும் அந்நேரம் மிகக் குதூகலமாய் காணப்படுவார்கள். இடையிடையே குரவை ஒலி, வெடியோசைகளை எழுப்புவர். நெற்குற்ற ஆரம்பிக்கும் போது எல்லோரும் ஒருங்கிணைந்து குரவை (கொலவ) அயர்வர். இதற்குக் ‘‘ கலியாணக் குரவை’’ என்று பெயர். நெல்லை மசிக்கும் போது, அடுக்கலாக்கும் போது, அரிசி தீட்டும் போது, கொழிக்கும் போதல்லாம் எழுவர் குழுவாகவும், மூவர் குழுவாகவும் மாறி மாறி குரவை இடுவர்.

இறுதியாக எல்லா அரிசிகளையும் பெட்டிகளில் நிறைத்து முடிந்தவுடன் நெல்குற்றலில் பங்கு கொண்ட அனைத்து

மகளிரும் ஒரு குழுமமாக நின்று உல்லாசமாகப் பேரொலி கிளப்பிக் குரவையிட வெடிகள் அதிர்ந்து கொண்டிருக்கும். அரிசியை வகைப்படுத்தி புளுங்கள் அரிசி வேறாகவும், பச்சை அரிசி வேறாகவும், வெண் புளுங்கல் அவியல் எனும் குறைந்தளவு நீரூற்றி அவித்த குருவிச் சம்பா எனும் அரிசியை வேறாகக் குற்றி புதிய பனையோலைப் பெட்டியில் நிறைத்து வெள்ளையால் மூடி ஒரு தனி இடத்தில் வைப்பதும் ஒரு தனி வழக்காகும். இவ்வரிசி மணியானதாக சுவையும் வாசமும் உள்ளதாகவிருக்கும். ஆறு மாதச் சோறு கொடுக்கும் போது மாப்பிள்ளை பெண்ணுக்கு இவ்வரிசிச் சாதமே வழங்கப்படும்.

திருமணப்பந்தத்தில், வீடு ஆகியவற்றைச் சோடிப்பதற்கென உஸ்தா மாமாமார் குழுவொன்று அக்காலத்தில் செயற்பட்டது. அவர்களை அழைத்தே பெரும்பாலும் வீட்டலங்காரங்கள் செய்வது வழக்கமாதும். இப்பணிக்காக இவர்கள் கூலி பெறுவதில்லை. மக்களின் பரஸ்பர உறவின் காரணியால் இப்படியான இலவச சேவைகள் பல தொடர்ந்து வந்துள்ளன.வீட்டின் நடுவறை ‘‘உள்ளீடு’’ எனப்படும். அவ்வறையே மணவறையாகும். அவ்வறையின் இடது பக்கச் சுவர் அருகே கட்டில் போடப்பட்டிருக்கும். வலது பக்கச் சுவர்ப் பக்கத்தில் பலதரப்பட்ட மிடாப்பானைகள் ஐந்து வரிசையில் அடுக்கப்பட்டிருக்கும்.

கலியாண அடுக்குகள் செய்து முடிக்கப்பட்டதும் குறிப்பிட்ட நல்ல நாளில் விவாகம் முடிப்பதற்காக மக்கள் அழைக்கப்படுவர். இதற்குக் ‘‘கலியாணத்திற்கு கூப்பிடுதல்’’ எனப்படும். அரசிலைகள் வளைத்துத் தூக்கப்பட்டிருக்கும் வெண்கல வட்டாவில் வெற்றிலை பாக்கு வைத்து அவற்றை வெள்ளையால் மூடி உரியவர் வீட்டுக்குக் கொண்டு போகப்படும். விவாகத்துக்கு அழைக்கப்பட்டவர் இவற்றைப் பெற்று இதில் ஒரு வெற்றிலையையும் ஒரு பாக்கையும் வட்டாவில் வைத்து கலியாண அழைப்பாளர்களிடம் மீண்டும் கொடுப்பார்(சலீம், 1992).

மாப்பிள்ளையின் கல்யாண உடையாக பழைய காட்சாறன், பெனியன், தோள்கட்டுச் சட்டை, பூச்சுவார் அல்லது குண்டுவார் பாதணியாக மிதியக்கட்டை (சிலருக்கு குமிழ்க்கட்டை) சால்வை, கைலேஞ்சு, துருக்கித் தொப்பி( சிலருக்குத் தலைப்பாகை) என்பன அணிவிக்கப்படும். வெள்ளி அல்லது பெண்ணில் ஆடையானது மிகவும் வேகமாக காலத்துடன் சேர்ந்து தானும் நவ நாகரீக போர்வையில் வாழ்ந்து வருகின்றது. ஆரம்பகாலத்தில் பாரம்பரியமான முறையில் பெண் அலங்காரம் நடைபெற்றாலும் தற்போது அவ்வாறு நடைபெறுவது கிடையாது. சற்று முன்னைய காலத்தில் மணப்பெண்ணுக்கு சேலை அணிவிக்கும் வழக்கம் காணப்பட்டது. எனினும் அவை மாறி லெஹங்கா எனும் ஆடை அணியும் மரபாக மாறியது. இது மிகவும் விலை உயர்ந்த ஆடையாகும். இதனை அணிவது மிகவும் கௌரவமான ஒன்றாகவும் இம்மக்களால் கருதப்படுகின்றது. எனினும் தற்போது வெள்ளை நிற பெரிய அலங்காரம் நிறைந்த ‘மெக்சி’ போன்ற ஆடை அணிவது பெஷன் என கருதப்பட்டு அணியப்படுகிறது. மேற்குறித்த ஆடைகளை விலைக்கு வாங்கமுடியாதவர்கள் வாடகைக்கு எடுத்து அணிந்து அந்நாளை சிறப்பிக்கும் வழக்கமும் இருந்து வருகின்றது.

திருமண நாளன்று புகைப்பட்ம் எடுக்கும் மரபு ஆரம்ப காலங்களில் மிகவும் முக்கியத்துவம் கொண்டு காணப்பட்டது. எனினும் தற்போது அதற்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக எமது ஆய்வுப்பிரதேசத்தில் தெரியவில்லை. Smart phone, Digital camera க்களினால் சில புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. மணமகன், மணமகனுக்கு அருகில் ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்களும் குடும்பம் குடும்பமாக நின்று புகைப்படம் எடுத்து மகிழும் பழக்கமும் அதனைப் பின்னொரு காலத்தில் ஞாபகத்திற்காக print செய்து வைக்கும் வழக்கமும் காணப்படுகின்றது. புகைப்படம் எடுப்பதற்கு எம்மை அழைக்காமல் விட்டார்கள் என்ற சில குழப்பங்கள் இடம்பெற்றிருப்பதாக மக்கள் கூறுகின்றனர். எனினும் தற்காலத்தில் Photo shop, Photo graphy கலைஞர்கள இந் நிகழ்வினை தனது தொழிலின் முதலீடாகப் பயன்படுத்தி பணம்

ஈட்டுகின்ற நடைமுறைகளும் காணப்படுகின்றன.

மாப்பிள்ளைக்கு குடை பிடித்தல், கால்களுக்க வாசனைத்திரவியம் தெளித்தல், வெள்ளைச் சீலை விரித்தல், மாப்பிள்ளை சிவப்புத் தொப்பி அணிதல் முதலிய மரபுகள் மருவி வருகின்றன. மாப்பிள்ளை தாலியினை கழுத்தில் போட்டுவிடும் மரபும் குறைந்து வருகின்றது. தாலி நகைப்பெட்டியினை மணப்பெண் கைகளில் வழங்குகின்றமையினை அதிகம் காணப்படக் கூடியதாய் இருக்கிறது. இஸ்லாமிய இயக்கங்களின் புத்தாக்கமான கருத்துக்களின் தாக்கத்தினால் இவை நிகழ்ந்திருக்கலாம் என விமர்சகர்கள் கூறுகின்றனர். பெண்ணிற்கு மாமியார், மதினிமார் மோதிரம், காப்பு, சபோனா, பூட்டுக்காப்பு, நெக்லஸ் முதலியவற்றையும் அணிவிக்கின்றனர். இதற்கு 'அடையாளம் போடுதல்-' 'பெட்டி கொண்டுபோதல் எனும் பெயர்களில் திருமணத்திற்கு முன்பு நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன.

திருமணம் நிகழ்ந்ததும் 'பெண் கூட்டுதல்' எனும் நிகழ்வு இடம்பெறுகின்றது. இதன்போது பெண் வீட்டார் மாப்பிள்ளைக்கும் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கும் ஆடைகளை வாங்கியிருப்பர். இவை பெரும்பாலும் சிவப்பு,கடும் சிவப்பு நிறம் சார்ந்ததாக காணப்படும். இவற்றை அணிந்து கொண்டு மணத்தம்பதியினரின் மிகவும் நெருங்கிய உறவினர்கள் மாத்திரம் தம்பதியினரை காரில் ஏற்றிவிட்டு ஏனையோர் இதர வாகனங்களில் மாப்பிள்ளை வீட்டுக்கு செல்வர். அங்கு செல்வோருக்கு சிற்றுண்டி விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அதன் பின் மாமியார் சிலவகைத் தங்க நகைகளை பெண்ணுக்கு அணிவிப்பர். பின்னர் தம்பதியினர் பெண் வீட்டுக்கு வந்துவிடுவர்.இவ்வாறு வெகு விமர்சனமான முறையில் நடாத்தப்படும் திருமணமானது பெரும் தன்மையான விடயமாக நோக்கப்படுகின்றது. எனினும் மாப்பிள்ளை திருமண ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டதும் மணமகளின் தந்தை ஓர் தங்க நகையினை மாப்பிள்ளையின் கைகளில் பரிசாக அணிவிப்பர். அதனை மணமகனின் தாய் மணப்பெண் அவர்களின் வீட்டுக்கு 3நாள் தங்க விடும்போது அணிவிப்பர்.

இவ்வாறு தங்க நகைகளாலும் ஆடம்பரப் பொருட்களாலும் செலவுகளாலும் தட்டு முட்டு சாமான்களாலும் விஷேடத்துவத்தை அடையும் திருமணங்களில் மகிழ்ச்சி ஒரு பக்கம் கைகூடினாலும் கடன் சுமையும் கவலைகளும் களிப்பான ஆரவாரம் ஓய்ந்ததும் தலை நிமிர்வதனைக் காணலாம். அதுவரை காலமும் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து தலை எறும்பு போல சேமித்து வைத்த பணம் ஒரு சில நாட்களில் பனிக்கட்டி போல கரைந்து விடுகின்றது. ஒரு பெண் பிள்ளையின் திருமணம் முடிந்தால் வாழ்க்கையின் இலட்சியம் ஒன்று நிறைவேற்றிய திருப்தியினைப் பெற்றவர்கள் பெறுகின்றனர். 'ஊட்டக் கட்டிப்பார் கல்யாணத்த பண்ணிப்பார்' என்பன போன்ற கிராமத்து மொழிகளும் இருக்கவே செய்கின்றன.

குறித்த பிரதேசம் சூழ மாற்று மத மக்களை கொண்டுள்ளதால் பெண்ணை தயார் செய்தல்,வீடுகளை அலங்கரித்தல்,ஜோடனை,தாளி கட்டல்,மணமகனின் சகோதரிகளுக்கு நகை வழங்குதல்,home coming போன்ற செயற்பாடுகளில் மாற்று மத கலாச்சாரத்தின் தாக்கமுள்ளதை அவதானிக்கலாம்.

இவ்விடத்தில் பின்வரும் ஹதீஸ் கூறும் விடயத்தை கருதடத்தில் கொள்வது காலச்சிறப்பாக அமையும்.அதாவது "பச்சை குத்தும் பெண்களையும், பச்சை குத்தும்படி வேண்டும் பெண்களையும்,முடியை இணைக்கும் பெண்களையும்,முகத்தில் மயிர்களை பிடுங்கும் பெண்களையும்,அழகிற்காக முன்பற்களில் இடைவேளையை ஏற்படுத்தும் பெண்களையும்,அல்லாஹ் படைத்த படைகோலத்தை மாற்றியமைக்கும் பெண்களையும்,அல்லாஹ் சபிப்பானாக."(Buhari, 5948/ muslim , 5573)ஆக இந்த ஹதீஸின் மூலம் மணப்பெண் அலங்காரத்தின் பெரும் பகுதி ஹராம் என்பது தெளிவாகின்றது.இன்னும் ஒரு பெண் தனது கணவனுக்கு மாத்திரமே கண்குளிர்ச்சியாக,அழகாக இருக்க வேண்டுமே தவிர திருமண நாளில் தன்னைக் காண வரும் அனைவருக்கும் கண்குளிர்ச்சியாக இருக்க வேண்டிய தேவை இல்லை.அது ஒருவகை விபச்சாரமாகவும் கருதப்படும்.ஆகவே

ஆண்,பெண் ஆகியோருக்கான தனியான இடங்கள் ஒதுக்கப்பட்டு அஜ்னபி,மஹ்ரமி பேணப்படும் வகையில் திருமணம் நடாத்தப்படல்,மணப்பெண்ணுக்காண ஆடைத்தெரிவில் இஸ்லாமிய ஆடைகளை முற்படுத்தல் என்பவற்றை மாற்றீடாக கூறலாம்.

இன்று வீண்விரயமில்லாமல் நடாத்தப்படும் திருமணங்களில் தான் பரக்கத் இருப்பதாக இஸ்லாம் கூறுகிறது.எனவே அது தொடர்பான கவனமும் அவசியமாகும்.

## திருமணக் கொண்டாட்டங்கள்

அக்காலத்தில் இராக்காலங்களிலேயே மாப்பிள்ளையைக் கூட்டிச் செல்லும் வழக்கமிருந்தது. வெளிச்ச வசதியில்லாத காலமது. தென்னையோலைப் பந்தமே இதற்குப் பாவிக்கப்பட்டது. எந்தக்காரணம் கொண்டும் பகல் வேளைகளில் மாப்பிள்ளையைக் கூட்டிச் செல்லமாட்டார்கள். சுப முகூர்த்தங்கள் பொருந்தவே ஊர்வலம் நிகழும். பொதுவாக அமங்கல வேளை, அவல ஒலிகள் கேட்காத போதே மாப்பிள்ளைப் பவனி ஆரம்பமாகும். மாப்பிள்ளைத் தோழனொருவர் அவ்வராத்திரி வேளையில் மாப்பிள்ளைக்குக் குடைபிடித்துக் கொண்டு வருவார், பந்தங்கள் பல எரியும், வெடிகள் முழங்கும், வானவெடிகள் அதிரும், குரவை ஒலிகள் கேட்கும்.

அதிகபட்சம் கால்நடையாகவே பவணிவரும். தூரத்தைப் பொருத்து வாகன உலா ஒழுங்கு செய்யப்படும். பைத்துகள், பதங்கள், கலியாணப்பாடல்கள் என்பவற்றைக் கூட்டத்தினர் பாடிச் செல்வர். ஊர்வலப் பாதையிலுள்ள உறவினர்கள் மாப்பிள்ளைக்குப் பால் பழம் கொடுத்து ஆரத்தி எடுத்தும், குரவை அயர்ந்தும் சங்கை செய்வர். வாசல்கள் தோறும் குத்து விளக்கெரியும். கிழக்கிழங்கைக் கிராமப் பகுதிகளில் அனேக கலியாணப்பாடல்கள் பாடப் பெற்று வந்துள்ளன(Saleem.1992).

திருமணத்தை இரகசியமாக செய்யாது தனது மகிழ்வை வெளிப்படுத்த முடியும் என்பதனை திருமணத்தில் நீங்கள் பகிரங்கப்படுத்துங்கள்.அதற்காக வேண்டி கஜ்சிராக்களை தட்டுங்கள் என ரஸுலுல்லாஹ் கூறுகின்றார்கள்.(ibnu maaja,1895).இவ்விடத்தில் இஸ்லாத்திற்கு முரணான அம்சங்களும்,ஆபசம் மற்றும் வீண் வீரயம் இடம்பெறுவது தவிர்க்கப்படல் வேண்டும். மாறாக மகிழ்வை வெளிப்படுத்தும் விடயங்கள் இடம்பெற வேண்டும்.

இதற்கு மாற்றமாக திருமண நாளில் மணமகளுக்காக ஓதும் துஆவினை மனதார ஓதி வாழ்த்தி ஒரு சம்பிரதாயத்தினை ஏற்படுத்த முடியும்.யாராவது திருமணம் முடித்தால் அவருக்கு வாழ்த்து தெரிவிக்கும் படி இஸ்லாம் தெளிவுபடுத்துகின்றது.ஆகவே அந்த நாளை வீணான செயற்பாடுகளில் மாத்திரம கழிப்பதை விட மணமக்களை வாழ்த்துவதினூடாக அவர்களது வாழ்வின் பறகத்திற்காக நாம் பிரார்த்தனை செய்ய முடியும்.(Abu davud,2130/ Ibnu maaja,1905).

## .கலியாணமும் விருந்தும்

மண்ணாலான பெரிய மிடாப் பானைகள், அகலமான கறிச்சட்டிகள், மட்குடங்கள், சிறுச்சட்டிகள், கொரச்சி, அரிக்கிமில முதலிய பெரிய மட்கலயங்கள் சேகரிக்கப்படும். மிகப் பெரிய வீரை மரங்களை வண்டியிலேற்றி அடுக்கி வைப்பார்கள். இவற்றைப் பிளந்து விறகுகளைக் குவிப்பர். பல வண்ணங்களிலுள்ள புதிய பனையோலைப் பெட்டிகளில் மான், மரை இறைச்சிகள் பச்சையாகவும், காயவைத்தும் வைக்கப்பட்டிருக்கும். முற்காலத்தில் விசேட வைபவங்களுக்கான விருந்துகளில் கறிக்காக மாட்டிறைச்சி உபயோகிப்பதில்லை. மிக இலகுவாக வீட்டுக்கண்மையில் மான், மரைகளை சுட்டும், பொறிவைத்துப் பிடித்தும் இறைச்சி பெறும் வாய்ப்பிருந்ததே அதன் காரணியாகும். முண் சாடிகளில் எருமை நெய் நிரப்பப்பட்டிருக்கும். அம்மியில் அரைத்த பல கொச்சிக்காய் மசாலாத் திரணைகள் பாத்திரத்தில் இருக்கும். இது குறித்துப் பேசுகையில்,

கறிகளோடு சாப்பிட்ட பின் கரைய(ச)ல் என்றொரு பல கூட்டுணவும் சாப்பிடத் தயாராக இருக்கும். கடடித் தயிர், தேங்காய்ப் பால், வாழைப்பழம்,

சீனிக்கற்கண்டு, பாலைப்பழம், ஈச்சம்பழம் ஆகியவற்றுடன் இதற்கென சமைக்கப்பட்ட வெறும் சோற்றையும் பிசைந்து சாப்பிடுவார்கள்.

சில விவாக விருந்துகளில் இவற்றுடன் தேன், சமாத்துப் புட்டு, அச்சிவெல்லம், கருப்பட்டி என்பனவும் இடம்பெற்றிருக்கும். தேனீர், கோப்பி, குடிபானங்கள், போறணைப் பொருட்கள் என்பவை அக்காலத்தில் புழக்கத்தில் இருந்தன(சமீம், 1997).

திருமணம் நடந்ததிலிருந்து 3ம் நாள் அன்று 'தண்ணியில் வெந்தது' எனும் பெயர் கொண்டு மணப்பெண்ணின் தாயார் இடியப்பம்,பிட்டு,லவரி முதலிய நீராவியில் அவித்து எடுக்கப்பட்ட ஆகாரங்களை மாப்பிள்ளையின் தாய் வீட்டுக்க கொண்டு செல்வர். மேலும் 'மறவுணச் சாப்பாடு' எனும் ஓர் பகல் விருந்தும் பெண் வீட்டாரால் விஷேடமான முறையில் செய்யப்படுகின்றது. தண்ணியில் வெந்தது என்னும் உணவானது பெரும்பாலும் இராக்காலங்களில் கொடுக்கப்படுகின்றது. மணம் முடித்த தம்பதியினர் உடல் ரீதியாக ஒன்றியைத்தும் 'வலீமா' எனப்படும் நிகழ்வு அதாவது பகற்போசண விருந்து நடைபெறுகின்றது. பெரும்பாலும் திருமணம் குறித்த அனைத்து நிகழ்வுகளும் இதனுடன் நிறைவடைகின்றது.

திருமண விருந்தில் கடுமையானது மணமகனால் வழங்கப்படும் வலீமா விருந்தே ஆகும்.ஏனைய சாப்பாடுகள் இஸ்லாம் கூறும் வழிகாட்டல்களுக்கு மாற்றமானது என்பதையும் நாம் அறிவோம்.குறிப்பாக வலீமா விருந்திலும் பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் அழைக்கப்பட வேண்டும் எனவும் ஆடம்பரமில்லாமல் சிறப்பாக செய்யும் வலீமாவிலே பறக்கத் இருப்பதாயும் அறிவோம்.இன்றைய நாட்களில் வலீமா மணமகன் மற்றும் மணமகளின் குடும்பத்தினரும் இணைந்து நடாத்தும் ஒன்றாக இருப்பினும் மணமகனால் நிறைவேற்றப்படும் வலீமாவினால் தான் கடமை நிறைவேறும் என்பதையும் அறிய வேண்டும்.மேலும் குறித்த சில நாட்களுக்குள் அதனை நிறைவேற்றுவதும் கட்டாயமான ஒன்றாகும்.(Ahmad,22931)

### 6. திருமணமும் அன்பளிப்புக்களும்

பெண்ணும், மாப்பிள்ளையும் அலங்கரிக்கப்பட்ட நிலையில் அலங்கரிக்கப்பட்ட நிலையில் அவரவர் வீட்டிலிருப்பர். மாப்பிள்ளை ஓர் ஆசனத்திலிருக்க சுற்றத்தார், தோழர்கள், குடும்ப உறவினர்கள் பலர் அவரைச்சூழ நிற்பர். பலவிதமான அன்பளிப்புக்கள் இச்சந்தர்ப்பத்தில் மாப்பிள்ளைக்கு வழங்கப்படும்.

சொந்தக்கார வனிதையர்கள் அவரவர் அணிந்திருக்கும் பூணாரங்களில் சிலவற்றைக் கழற்றிப் பெண்ணுக்கு அணிவித்து அழகு பார்த்து மகிழ்வர். அக்காலத்து மனித வாஞ்சையின் உயர் பண்புகள் இப்படியான சில நடை முறைகளில் வெளிப்படையாகக் காணக்கூடியதாய் இருந்தன. இவை ஏழு நாள் வரையும் பெண்ணிடமே இருக்கும். இதைக் கருத்தில் கொண்டே " ஏழு நாளைக்கு இரப்பு (இரவல்)ப் பூணாரம்" என்ற மொழிவழக்கிலிருந்தது.எட்டாம் நாள் ஆபரணங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்(ஜெமீல், 2010). இன்னும் மணமக்களின் சார்பாக தட்டேந்தி பணம் பெறும் நிலையும் காணப்படுகின்றது இதனை வட்டா என்றும் அழைப்பர். திருமணத்தின் பின்னர் மணமக்களால் கட்டாயமாக பெறப்படும் பணத்தொகை அன்பளிப்பாக கருதப்பட மாட்டாது.மாறாக அதனை நாம் லஞ்சம் என்ற அடிப்படையிலும்,யாசகம் என்ற அடிப்படையிலும் தான் நோக்க வேண்டி உள்ளது.மாறாக "பரிசில்களை பரிமாறிக்கொள்ளுங்கள் அன்பு அதிகரிக்கும்" எனும் நபிமொழிக்கு ஏற்ப அன்பளிப்புகளை வழங்குவதும்,அதனைப் பெற்றுக் கொள்வதும் இஸ்லாமிய வழிகாட்டல்களே.(thabarani, 360). அதனை இஸ்லாமிய வழிகாட்டலுடன் மேற்கொள்ள முடியும். நிர்ப்பந்தத்தின் மூலம் பெறுவதால் பலரது வெறுப்புக்களையே பெற வேண்டியுள்ளது.

அஜ்னபி: திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டோர்.

மஹ்ரமி: திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டோர்.

ஆலிம்: மார்க்க தலைவர் ஹலால் - அனுமதிக்கப்பட்டது.

அஸ்ஸலாமுஅலைக்கும் - உங்கள் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக.

காக்கா – அண்ணா.

**ஆய்வு முடிவும் பரிந்துரைகளும்**

மேலே நாம் கண்ட சில சம்பிரதாயங்களில் அடிப்படைகளையும், இஸ்லாம் கூறும் விடயங்களையும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் குறித்த திருமணம் எனும் கலாச்சார நிகழ்வு தொடர்பாக இரண்டு விடயங்பளில் கவனம் செலுத்துவதினூடாக அவற்றை இஸ்லாமியத்துவப்படுத்த முடியும். அவையாவன:

1.வீண்விரயத்தை தவிர்த்தல்

2.மார்க்க வரையறைகளை மீறாதிருத்தல்

முஸ்லிம்கள் தமக்கேயுரிய தனி தன்மைகளுடன் தமது அனைத்து கலாச்சார நிகழ்வுகளையும் நடாத்த முடியும். ஆடம்பரமாக செய்ய வேண்டும் எனவும், மற்றவர்களைப் போல் நாமும் செய்ய வேண்டும் எனவும் அவாக் கொள்வதனால் தாம் இஸ்லாம் எனும் வட்டத்திலிருந்து வெளியாகி தமது செயற்பாடுகளை அமைக்க முற்படுகின்றனர். அதனால் தான் இஸ்லாமியத்துவப்படுத்தல் எனும் தலைப்பின் கீழ் மேற்கூறப்பட்ட விடயங்களைப் பேச வேண்டியுள்ளது எனவே மேலே கூறப்பட்ட இரு விடயங்களையும் தடுப்பதினூடாக திருமண கலாச்சாரத்தை இஸ்லாமியத்துவப்படுத்த முடியும் என்பதே இவ் ஆய்வின் முடிவாகவுள்ளது

## References


Abdulla, Rameez.(2001).*கிழக்கிலங்கைக் கிராமியம் : சமூக பண்பாட்டியல் ஆய்வு.* Colombo : Mallikaip pantal.

Ahamed,M.K. Seyyed. (1968*). முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம்.* Colombo: Arasu publication.

Ameen,C .M.A.(1996). *முஸ்லிம்கள் வளர்த்த அழகியல் கலைகள்.* Srilanka,Thihari: Reshma Publisher.

Ameen,M,I,M.(2009).*கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்.*˙-1870-1915.islamic book house.colombo.

Ameen,M.I.M. *(History and culture of srilankan muslims with special reference to the period 1870-1915*. Peradeniya: university of peradeniya.

Arasaratnam, Sinnappah .(1964). *The muslims of Ceylon. In Ceylon*: new jersey prentice hall.

Asad, M.N.M. Kamil . (1988) . *some aspects of the political and commercial history of the muslims of sri lanka with special reference to the pritish period*. University of peradeniya.

Azeez, A.M.A. (1947). *The Ceylon moors*. Islamic zeylanica.

Bawa, Ahmadu . (1888). *The marriage customs of the moors of Ceylon*. Colombo:MICH Souvenir IIIs

Blaze, L. E. (1946). *The moors of Ceylon*. Colombo: zahira college.

Cassim,P.T.M. (1948). *இலங்கை சோனகர்களின் சரித்திரம்*. Colombo.

Chandy, verghese. (1981). *The discipline of muslims in sri lanka* .Colombo: serendib.

Chitty, Simon,C. (1836). *An essay descriptive of the manners and customs of the moors of Ceylon*. Journal of the Ceylon branch.

De silva, S.F. (1949). *Islamic civilization*. Colombo: times of Ceylon press.

Dr.Shukri,M,A,M.(1986).*Muslims Of Srilanka*. Jamia naleemia. Srilanka.

Gananath Obeyesekere .(1975) *"Sinhalese Buddhist Identity in Ceylon" In Ethnic identity: Cultural continuities and Change ed.* George De Vos and Lola Romanucci-Ross (Chicago: The University of Chicago Press, , 231.

Goonewardene, K.W. (1959-60). *The history of the muslims in ceylon before the british occupation*. University of Ceylon: peradeniya.

Hassan, M.C.A. (1968). *Katharagama mosque and shrine*. Colombo: thauoos illustrations.

Hazari, H.J. (1914). *Some observations on the muslims of Ceylon*. Colombo.

Hussein, Asiff. (2007).*an ethnological study of the Muslims of Sri Lanka*. Colombo: sarandib.